## சுருக்கம்

திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் – மாநில நிதிக் குழு மானியத்தின் மூலம் கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை 66,025 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு செயல்படுத்துதல் மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து ஒரு ஆண்டுக்கான செலவினம் ரூ.206.04 கோடி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது – இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அதி.1) துறை**

அரசாணை (நிலை) எண்.54

நாள்: 10.4.2018

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 47, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள் 26.3.2015.
2. அரசாணை (நிலை) எண். 10, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள் 20.1.2016.
3. அரசாணை எண். 127, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள் 24.10.2016.
4. அரசாணை (நிலை) எண்.53, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி–1) துறை, நாள் 5.4.2018.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.52673/2016/SBM (G)-3, நாள் 6.4.2018.

-------

**ஆணை:**

மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்திட 66,025 துப்புரவு பணியாளர்களுக்கு மாத ஊதியமாக ரூ.2,600/– வீதம் ஆண்டொன்றிக்கு ரூ.206.04 கோடியை மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள் கிராம ஊராட்சிகளில் தூய்மைக் காவலர்களை ஈடுபடுத்தி மாநில நிதிக்குழு மானியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை கீழ்க்கண்ட ஏற்பாடுகள் மற்றும் வழிக்காட்டி நெறிமுறைகளின்படி தொடர்ந்து செயல்படுத்திடலாம் என்பதை தெரிவித்துள்ளார்:–

**1) திடக்கழிவு மேலாண்மை பணிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் (அல்லது) ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் (Outsourcing முறையில்) தூய்மை காவலர்களை ஈடுபடுத்துதல்:-**

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், இப்பணிக்காக 150 குடும்பங்களுக்கு ஒரு தூய்மைக் காவலர் வீதம் 12,524 கிராம ஊராட்சிகளிலும் கால நிர்ணய வேலை அளவு அடிப்படையில் மொத்தம் (66,025 தூய்மைக் காவலர்கள்) தேவைப்படுவர். இவர்களை கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் (Outsourcing முறையில்) மட்டுமே

Scanned by CamScanner

ஈடுபடுத்தப்பட வேண்டும். மேற்கண்ட தூய்மைக் காவலர்களை கீழ்க்கண்ட வரையறுக்கப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்யலாம்:–

1) ஏற்கனவே திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் தூய்மைக் காவலர்களாக குறைந்தபட்சம் 100 நாட்கள் பணியாற்றிய ஆண்கள் / பெண்களை மட்டுமே இப்பணிக்கு தேர்வு செய்யப்பட வேண்டும்.

2) அவ்வாறு ஏற்கனவே செயல்படுத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் 100 நாட்கள் தூய்மைக் காவலராக ஈடுபடுத்தப்பட்ட நபர்கள் போதிய அளவில் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சிகளில் இல்லாத பட்சத்தில் குறைந்தபட்சம் 50 நாட்களுக்குமேல் இத்திட்டத்தில் தூய்மை காவலர்களாக பணிபுரிந்த நபர்களை மட்டுமே தேர்வு செய்யப்பட வேண்டும்.

3) மேற்கூறிய இரு தகுதிகள் கொண்ட நபர்கள் இல்லாத கிராம ஊராட்சிகளில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பிற பணிகளில் குறைந்தபட்சம் 100 நாட்கள் பணியாற்றிய நபர்கள் தூய்மைக் காவலர்களாக தேர்வு செய்யப்பட வேண்டும்.

4) மேற்கூறிய தகுதிகளுடன் 35 முதல் 55 வயதுக்குப்பட்ட உடற்தகுதியுடைய நபர்களை மட்டுமே சம்மந்தப்பட்ட கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளால் இத்திட்டத்திற்காக தேர்வு செய்யப்படவேண்டும்.

5) திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணித்தல பொறுப்பாளராக பணியாற்றுபவர்களை தூய்மைக் காவலர்களாக தேர்வு செய்யக்கூடாது.

**2) தூய்மைக் காவலர்களுக்கான மாத ஊதியம் வழங்குதல்:-**

- 2018–19ம் ஆண்டில் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் (Outsourcing முறையில்) திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளில் ஈடுபடுத்தப்படும் தூய்மைக் காவலருக்கு மாதம் ரூ.2,600/– வீதம் ஒவ்வொரு ஊராட்சியிலிருந்தும் சம்மந்தப்பட்ட கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாக தூய்மைக் காவலர்களின் வங்கிக் கணக்கிற்கு ECS முறையில் ஊதியம் வழங்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியிலிருந்து, தூய்மைக் காவலர்களுக்கான ஊதியத்தை நேரடியாக வழங்கக்கூடாது.

- சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி தனது திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி கணக்கிலிருந்து ஒவ்வொரு மாதமும் 5–ம் தேதிக்குள் முந்தைய மாதத்தின் வாராந்திர வருகைப் பட்டியல் தொகுப்பின்படி (NMR) பணிசெய்த காலத்திற்கான மொத்த ஊதியத்தை சம்பந்தப்பட்ட அமைப்பிற்கு, அதாவது கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் வங்கி கணக்கிற்கு விடுவிக்கப்பட வேண்டும். மேற்படி அமைப்பானது, சம்பந்தப்பட்ட தூய்மைக் காவலர்களின் மாதஊதியத்தை அவர்களது வங்கி கணக்கில் ECS மூலம் மட்டுமே வரவு வைக்கப்பட வேண்டும். அவர்களுக்கு பணமாகவோ காசோலையாகவோ வழங்கப்பட கூடாது.

**3) பணித்தள பொறுப்பாளர் மேற்பார்வையிடுதல் மற்றும் தினசரி வருகை பதிவேடு (NMR) பராமரித்தல்:-**

- திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கண்காணிப்பு பணிக்காக தனியாக பணித்தல பொறுப்பாளர்களை ஈடுபடுத்தக்கூடாது.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஏற்கனவே பிற பணிகளை மேற்பார்வையிடும் பணித்தல பொறுப்பாளர்கள் திடக்கழிவு மேலாண்மைத் திட்டப்பணிகளையும் கண்காணிக்க இப்புதிய நடைமுறையின்படி பொறுப்பாக்கப்படுகின்றனர்.

Scanned by CamScanner

- சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியில், கிராம தொகுப்பில் (Cluster) பணியாற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணித்தலப் பொறுப்பாளர்கள், திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கான தினசரி வருகை பதிவேட்டினை பராமரிக்க வேண்டும்.

- தினசரி வருகை பதிவேட்டில், தூய்மைக் காவலர்கள், பணி செய்த விபரம் தினசரி குறிக்கப்பட வேண்டும். தூய்மைக் காவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வீடுகள், தெருக்கள் மற்றும் வணிக வளாகப் பகுதிகளில் குப்பைகள் சேகரம் செய்யப்பட்ட விபரம் குறிக்கப்படவேண்டும். மேலும், பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதிகளில் வசிக்கும் குறைந்தபட்சம் 10 குடும்பத்தார்களிடம் தூய்மைக் காவலர்கள் பணி செய்தமைக்கான குடியிருப்போரின் சான்று பெற்றிருப்பதை பணித்தலப்பொறுப்பாளர் சரிபார்த்து சான்றொப்பம் தினசரி செய்ய வேண்டும்.

- மேலும், தூய்மைக் காவலர்கள் தங்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதிகளிலிருந்து குப்பைகளை சேகரம் செய்து திடக்கழிவு மேலாண்மை மையத்திற்கு கொண்டு சேர்த்தலை கண்காணிக்க வேண்டும். இதனைத் தொடர்ந்து, திடக்கழிவு மேலாண்மை மையத்தில் சேகரம் செய்யப்பட்டுள்ள குப்பைகளை எடை போடப்பட்டு, ஒவ்வொரு தூய்மைக் காவலர் வாரியாக சேகரம் செய்யப்பட்ட குப்பைகளின் எடை அளவினை, அதற்கென பரிந்துரைக்கப்பட்ட பதிவேட்டில் தினசரி பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பை, மறுசுழற்சி செய்யக்கூடிய பிளாஸ்டிக் மற்றும் இதர பொருள்கள், மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் எடையையும் இப்பதிவேட்டில் பணித்தல பொறுப்பாளர்கள் தினசரி பதிவு செய்து சான்றொப்பம் இடவேண்டும்.

- அரசாணை எண் 87, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள் 8.6.2015–ல் தூய்மைக் காவலர்கள் / துப்புரவு பணியாளர்கள் தினசரி செய்ய வேண்டிய வரையறுக்கப்பட்டுள்ள பணியின் அளவு தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும். ஒன்றிய பணிமேற்பார்வையாளர் வாராந்திர தினசரி வருகை பட்டியலில் (NMR) மதிப்பீடு செய்யும்போது இதனை உறுதி செய்ய வேண்டும்.

- சம்பந்தப்பட்ட ஊராட்சியின் ஒன்றிய பணி மேற்பார்வையாளர் (Overseer) மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் இந்த தினசரி வருகைப் பதிவேடு மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்ட பதிவேடுகளில் முறையாக பதிவு செய்யப்படுவதை கண்காணித்து வாரந்தோறும் சான்றொப்பமிட வேண்டும்.

- பிரதி மாதம் கடைசி வேலை நாளில் இந்த தினசரி வருகை பதிவேடு (வாராந்திரத்திற்கானது) தொகுக்கப்பட்டு, தூய்மைக் காவலர்கள் பணிபுரிந்த நாட்கள், சேகரம் செய்யப்பட்ட குப்பைகளின் அளவினை (மக்கும் குப்பை அளவு, மறு சுழற்சி செய்யக்கூடிய குப்பைகளின் அளவு மற்றும் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளின் அளவு) குறிப்பிட்டு ஒன்றிய பணிமேற்பார்வையாளர் சான்றொப்பம் செய்து, கிராம ஊராட்சியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

- ஒன்றிய பணிமேற்பார்வையாளரின் பரிந்துரைப்படி, தூய்மை காவலர்களுக்கு பணி செய்த காலத்திற்கான மாதாந்திர ஊதியம் வழங்க கிராம ஊராட்சித் தலைவர் / தனி அலுவலர் (கிராம ஊராட்சி) பிரதி மாதம் 5–ந் தேதிக்குள் சம்பந்தப்பட்ட கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் வங்கி கணக்கிற்கு தொகையினை விடுவிக்கப்படவேண்டும். இதனைத் தொடர்ந்து, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு தூய்மைக் காவலர்களுக்கான மாதாந்திர ஊதியத்தினை அவர்களது வங்கிக் கணக்கிற்கு ECS மூலம் அதிகபட்சமாக பிரதி மாதம் 10ந் தேதிக்குள் செலுத்தப்பட வேண்டும்.

- தூய்மைக் காவலர்களுக்கான ஊதியம் உரிய நேரத்தில் வழங்குவதை உறுதி செய்வது சம்பந்தப்பட்ட மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களின் பொறுப்பாகும்.

Scanned by CamScanner

- குறிப்பிட்ட மாதத்தில் நான்கு வாரங்களில் தொடர்ச்சியாக வரையறுக்கப்பட்ட பணியளவினை குறைவாக பணி செய்திருப்பின் சம்பந்தப்பட்ட தூய்மைக் காவலர்களுக்கு பதிலாக மாற்றுப் பணியாளரை வரையறுக்கப்பட்ட தகுதியின்அடிப்படையில், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் தேர்வு செய்து திடக்கழிவு மேலாண்மைத்திட்டப் பணிக்கு வழங்கிட சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**4) தூய்மைக் காவலர்களுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் மருத்துவ காப்பீடு:–**

- முதலமைச்சரின் ஒருங்கிணைந்த மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இதுவரை காப்பீடு பெறப்படாத தூய்மைக் காவலர்களுக்கு, மருத்துவ காப்பீடு பெற்று அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும்.

- இதைத் தவிர வருடத்திற்கு குறைந்தபட்சம் இருமுறை தூய்மை காவலர்களுக்கு வட்டார அளவில் சுகாதாரத் துறை மூலம் மருத்துவ பரிசோதனைக்கான "சிறப்பு மருத்துவ முகாம்" நடத்தப்பட வேண்டும். அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ பரிசோதனை அட்டையில் (Health Card) உரிய பதிவுகள் செய்து அதை அவர்கள் தொடர்ந்து பராமரிக்குமாறு அறிவுரை வழங்கப்பட வேண்டும்.

**5) தூய்மைக் காவலர்களுக்கான பயிற்சி:-**

- திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் தூய்மைக் காவலர்களுக்கு குறைந்தபட்சம் காலண்டிற்கு ஒருமுறை வட்டார அளவில், குப்பைகளை தரம் பிரித்தல், உரமாக்குதல், மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை தனியே சேகரித்து விற்பனை செய்தல், மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துதல் போன்ற நடைமுறைகள் / செயலாக்கம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். பயிற்சிக்கான செலவினத்தை தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி நடைபெறுவதை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் ஆகியோர்களால் உறுதி செய்யப்பட வேண்டும்.

**6) தூய்மைக் காவலர்களின் பணிகளை கண்காணித்தல்:-**

- ஏற்கனவே, திடக்கழிவு மேலாண்மைத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் ஊராட்சி அளவிலான திடக்கழிவு மேலாண்மைக்குழு அமைக்க உத்திரவிடப்பட்டுள்ளது. இக்குழு அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதையும், தூய்மைக்காவலர்களின் பணிகளை கண்காணிப்பதையும் மாவட்ட ஊரக வளர்ச்சிமுகமை திட்ட இயக்குநர் அவர்களால் உறுதி படுத்தப்படவேண்டும். இதைத் தவிர கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம ஊராட்சி அளவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட கண்காணிப்பு முகமையாக (Nodal Agency) செயல்பட வேண்டும்.

**7) திட்ட செயலாக்கம் மற்றும் கண்காணிப்பு :-**

- வட்டார அளவில் மண்டல அலுவலர்கள் தங்கள் தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராம ஊராட்சிகளையும், உதவிப் பொறியாளர்கள் வட்டாரத்திலுள்ள மொத்த கிராம ஊராட்சிகளில் குறைந்தபட்சம் நான்கில் ஒரு பங்கு (1/4) கிராம ஊராட்சிகளிலும் வட்டார வளர்ச்சி அலுவலர் வட்டாரத்திலுள்ள கிராம ஊராட்சிகளில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு (1/3) கிராம ஊராட்சிகளிலும் மாதந்தோறும் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட செயல்பாட்டை கண்காணிக்க பொறுப்பாக்கப்படுகிறார்கள்.

- மாவட்ட அளவில் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செயற்பொறியாளர்(ஊவ) மற்றும் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ஆகியோர்கள் குறைந்தபட்சம் 10 கிராம ஊராட்சிகளையும், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களின் மண்டல அலுவலர்கள், உதவி திட்ட அலுவலர்கள்(வீடு மற்றும் சுகாதாரம்) மற்றும் உதவி

Scanned by CamScanner

செயற்பொறியாளர்கள் ஆகியோர்கள் குறைந்தபட்சம் 15 கிராம ஊராட்சிகளிலும் மாதந்தோறும் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட செயல்பாட்டை கண்காணிக்க பொறுப்பாக்கப்படுகிறார்கள்.

8) தூய்மைக் காவலர்கள் தினசரி வருகையை கண்காணித்தல்:-

- தூய்மைக் காவலர்களின் தினசரி வருகை (Attendance) எண்ணிக்கையை சம்பந்தப்பட்ட பணித்தல பொறுப்பாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு தினசரி காலை 11 மணிக்குள் தெரிவிக்க வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சிகள்) ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் அன்றைய தினம் வருகை புரிந்த தூய்மைக் காவலர்களின் எண்ணிக்கையை www.tnrd.gov.in இணைய தளத்தில் தினசரி பிற்பகல் 3 மணிக்குள் பதிவேற்றம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும். மாவட்ட அளவில் தூய்மைக் காவலர்களின் வருகை மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெற்ற ஊராட்சிகளின் விவரத்தை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கண்காணித்து தினசரி ஆய்வு செய்ய வேண்டும்.

9) விருதுகள்:-

- திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் தூய்மைக் காவலர்கள் / கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் கிராம ஊராட்சியினை கண்டறிந்து அவர்களுக்கு வட்டார மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் அரசு விழாவின்போது (குடியரசு தினம்/சுதந்திர தினம்) விருதுகள் வழங்கவும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

3. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 66,025 தூய்மைக் காவலர்கள் ஈடுபடுத்தவும், இவர்கள் ஒவ்வொருவருக்கும் மாத ஊதியமாக ரூ.2,600 வழங்கவும், அதற்கு ஆண்டொன்றிற்கு ரூ.206.04 கோடி செலவினத்தை மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து மேற்கொள்ள அரசாணை (நிலை) எண். 53, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி−1) துறை, நாள் 5.4.2018 ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, திடக்கழிவு மேலண்மைத் திட்டம் செயல்படுத்தவேண்டி 2018−19ம் ஆண்டில் கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு விடுவிக்கப்படவேண்டிய மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து ரூ.206.04 கோடியை, 67:33 என்கிற விகிதாச்சாரத்தில் (கிராம ஊராட்சிகள்−ரூ.138.05 கோடி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்−ரூ.67.99 கோடி), மாதந்தோறும் ரூ.17.17 கோடி வீதம் பிடித்தம் செய்திடவும் அவ்வாறு பிடித்தம் செய்யப்பட்ட தொகையை சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு மாதாந்தோறும் விடுவிப்பு செய்யவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளித்து உத்திரவிடுமாறு அரசினை கேட்டுக்கொண்டுள்ளார். அவ்வாறு மாதந்தோறும் விடுவிக்கப்படும் தொகையினை தூய்மைக் காவலர்களின் எண்ணிக்கைக்கேற்ப கிராம ஊராட்சிகளில் ஏற்கனவே பராமரிக்கப்படும் திடக் கழிவு மேலாண்மைத் திட்ட வங்கிக் கணக்கிற்கு பிரித்து வழங்கிட மாவட்ட ஆட்சித்தலைவரை கேட்டுக் கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார். மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள் மாவட்ட வாரியான தூய்மைக்காவலர் எண்ணிக்கை மற்றும் 2018−19 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு, தூய்மை காவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள், திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணித்தள பொறுப்பாளர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கடமைகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றுடன் வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடுமாறு அரசினை கோரியுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அவற்றை ஏற்றுக்கொள்ள முடிவுசெய்து பார்வை 1, 2 மற்றும் 3 ல் வெளியிடப்பட்ட அரசாணைகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் தூய்மைக் காவலர்களை ஈடுபடுத்தி தினக்கூலி வழங்குதல் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள

Scanned by CamScanner

நடைமுறைகள் ரத்து செய்யப்படுகிறது. தற்போது தூய்மைக் காவலர்கள் குறித்து வெளியிடப்படும் புதிய நடைமுறைகள் இவ்வரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து உடன் நடைமுறைக்கு வருகிறது. கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணியாற்றும் தூய்மை காவலர்களுக்கான ஊதியம் மாநில அரசின் நிதி ஆதாரம் மூலம் வழங்குவது தொடர்பான ஆணை வெளியிடப்பட்டதை தொடர்ந்து வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வரசாணையின் இணைப்பு–1, 2, 3 மற்றும் 4 -ல் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை 15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15 வாயிலாக)
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை 15 வாயிலாக)

<u>நகல்</u>
கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, சென்னை – 9
மாநில கணக்குத் துறைத் தலைவர், சென்னை – 18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை - 35
மாண்புமிகு அமைச்சர் (ந.நி., ஊ.வ., (ம) சி.தி.செ) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை 9
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (அந–II) துறை, சென்னை – 9
தேசிய தகவல் மையம், சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Scanned by CamScanner

# இணைப்பு – I

| மாவட்ட வாரியான தூய்மைக்காவலர் எண்ணிக்கை மற்றும் 2018–19 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தூய்மைக்காவலரின் மொத்த எண்ணிக்கை | மாத ஊதியம் (ரூ. 2600/–வீதம்) (ரூ.கோடியில்) | 2018–19 ஆம் ஆண்டிற்கான நிதித் தேவை (ரூ.கோடியில்) |
| 1 | காஞ்சிபுரம் | 2774 | 0.72 | 8.65 |
| 2 | திருவள்ளூர் | 2257 | 0.59 | 7.04 |
| 3 | கடலூர் | 2895 | 0.75 | 9.03 |
| 4 | விழுப்புரம் | 4609 | 1.20 | 14.38 |
| 5 | வேலூர் | 3545 | 0.92 | 11.06 |
| 6 | திருவண்ணாமலை | 3224 | 0.84 | 10.06 |
| 7 | சேலம் | 3585 | 0.93 | 11.19 |
| 8 | நாமக்கல் | 1763 | 0.46 | 5.50 |
| 9 | தருமபுரி | 1822 | 0.47 | 5.68 |
| 10 | ஈரோடு | 1961 | 0.51 | 6.12 |
| 11 | கோயம்புத்தூர் | 1608 | 0.42 | 5.02 |
| 12 | நீலகிரி | 612 | 0.16 | 1.91 |
| 13 | தஞ்சாவூர் | 2557 | 0.66 | 7.98 |
| 14 | நாகப்பட்டிணம் | 2295 | 0.60 | 7.16 |
| 15 | திருவாரூர் | 1681 | 0.44 | 5.24 |
| 16 | திருச்சிராப்பள்ளி | 2208 | 0.57 | 6.89 |
| 17 | கரூர் | 1237 | 0.32 | 3.86 |
| 18 | பெரம்பலூர் | 790 | 0.21 | 2.46 |
| 19 | புதுக்கோட்டை | 1912 | 0.50 | 5.97 |
| 20 | மதுரை | 2305 | 0.60 | 7.19 |
| 21 | தேனி | 997 | 0.26 | 3.11 |
| 22 | திண்டுக்கல் | 2588 | 0.67 | 8.07 |
| 23 | இராமநாதபுரம் | 1834 | 0.48 | 5.72 |
| 24 | விருதுநகர் | 2231 | 0.58 | 6.96 |
| 25 | சிவகங்கை | 1587 | 0.41 | 4.95 |
| 26 | திருநெல்வேலி | 3081 | 0.80 | 9.61 |
| 27 | தூத்துக்குடி | 1810 | 0.47 | 5.65 |
| 28 | கன்னியாகுமாரி | 1060 | 0.28 | 3.31 |
| 29 | கிருஷ்ணகிரி | 2219 | 0.58 | 6.92 |
| 30 | அரியலூர் | 1121 | 0.29 | 3.50 |
| 31 | திருப்பூர் | 1857 | 0.48 | 5.79 |
| | மொத்தம் | 66025 | 17.17 | 206.04 |

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

Scanned by CamScanner

# இணைப்பு – II

## தூய்மை காவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்

1. கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் கட்டுப்பாட்டிலும் கிராம ஊராட்சியின் வழிக்காட்டுதலுடனும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பணிபுரிதல்.
2. பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள முதன்மைச் சாலைகள், தெருக்கள், வீதிகள் ஆகியவற்றில் உள்ள வீடுகள் / வணிக அமைப்புகள் ஆகியவற்றில் தினசரி உற்பத்தியாகும் குப்பைகளை சேகரித்தல்.
3. திடக்கழிவு மேலாண்மை மையத்தில் சேகரித்து வைப்பதற்கான இடத்தில் குப்பைகளை கொண்டு சேர்த்தல்.
4. சேகரிக்கப்பட்ட குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மறுசுழற்சி செய்யக்கூடிய குப்பைகள் மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத குப்பைகள் எனத் தனித்தனியாக பிரித்தெடுத்தல்.
5. பிரித்தெடுக்கப்பட்ட மக்கும் குப்பைகளை உரக்குழிக்குள் பரவலாக அடுக்குமுறையில் (Layer by Layer) சேகரம் செய்து ஒவ்வொரு 150 mm உயரத்திலும் மாட்டுச்சாணம் தெளித்து உரமாக்கப்பட முறையாக பராமரித்தல்.
6. மக்காத குப்பைகளில் மறு சுழற்சி செய்யக்கூடியவற்றை கிராம ஊராட்சி மூலம் விற்பனை செய்வதற்கு உதவுதல்.
7. மக்காத குப்பைகளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளை இதற்கென அமைக்கப்பட்ட துப்புரவு குழிகளில் (Sanitary Land Fill) கடினமான பிளாஸ்டிக் சீட் விரித்து அதன்மேல் இந்த குப்பைகளை சேகரம் செய்து, நிலத்தடி நீர் மற்றும் சுற்றுப்புறம் மாசு அடையாதவாறு பராமரித்தல் மற்றும் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்த உதவுதல்.
8. உரக்குழிகளில் தயாரிக்கப்படும் மக்கிய உரத்தை கிராம ஊராட்சி விற்பதற்கு உதவுதல்
9. தமக்கு கொடுக்கப்பட்டுள்ள சீருடை, தூய்மை படுத்தும் உபகரணங்கள் / மூன்று சக்கர வண்டிகளை முறையாக பயன்படுத்தி பாதுகாத்தல் மற்றும் திடக் கழிவு மேலாண்மை மையத்தினை தூய்மையாக பராமரித்தல்.
10. திடக்கழிவு மேலாண்மை குறித்து மாவட்ட, வட்டார அளவில் வழங்கப்படும் பயிற்சிகளில் தவறாமல் பங்கேற்றல் மற்றும் பயிற்சியில் அளிக்கப்படும் செயல்முறைகளை முறையாக பின்பற்றுதல்.
11. தூய்மை காவலர்களுக்கான ஊதியம் பிரதிமாதம் 10 ம் தேதிக்குள் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாக தூய்மை காவலர்களின் வங்கி கணக்கிற்கு செலுத்தப்பட்ட விவரம் கிராம ஊராட்சிக்கு தெரியப்படுத்துதல்.
12. திடக்கழிவு மேலாண்மை குறித்து மாவட்ட நிர்வாகம், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் கிராம ஊராட்சியால் அவ்வப்போது வழங்கும் அறிவுரைகளை ஏற்று பணிகளை முறையாக செயல்படுத்துதல்.

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

[signature] .../4/18
பிரிவு அலுவலர்

Scanned by CamScanner

# இணைப்பு – III

## திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கையில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட பணித்தள பொறுப்பாளர்களின் (Worksite Supervisor) கடமைகள் மற்றும் பொறுப்புகள்.

1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை ஊறுதித்திட்டத்தில் சம்பந்தப்பட்ட கிராம தொகுப்பில் (Cluster) பணிபுரியும் பணித்தள பொறுப்பாளர்கள் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட பணிகளையும் கண்காணித்தல்.
2. இவர்கள் தூய்மைக் காவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வீடுகள் மற்றும் தெருக்களில் தினசரி உற்பத்தியாகும் குப்பைகளைச் சேகரித்தலை கண்காணித்தல்.
3. பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதிகளில் வசிக்கும் குடும்பத்தாரிடம் தூய்மை காவலர்கள் பணி செய்தமைக்காக பெறப்பட்ட சான்றொப்பத்தைச் சரிபார்த்தல்.
4. திடக்கழிவு மேலாண்மை மையத்திற்கு குப்பைகளை கொண்டு சேர்த்தலைக் கண்காணித்தல்.
5. சேகரம் செய்யப்பட்ட குப்பைகளின் அளவை கண்டறிய எடை போடுதல், உரிய பதிவேட்டில் பதிவு செய்து பராமரித்தல், சேகரிக்கப்பட்ட குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக பிரித்தெடுத்தலைக் கண்காணித்தல்.
6. பிரித்தெடுக்கப்பட்ட மக்கும் குப்பைகளை உரக்குழிக்குள் சேகரம் செய்வதுடன் அவை உரமாவதற்கு மாட்டுச்சாணம் தெளித்தலை உறுதி செய்தல் மற்றும் கண்காணித்தல்.
7. திடக்கழிவு மேலாண்மை மையத்தில் மறுசுழற்சி செய்யக்கூடிய பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்தெடுத்து சேகரம் செய்துவைத்தல்.
8. மக்காத குப்பைகளில் மறுசுழற்சி செய்யக்கூடியவற்றை கிராம ஊராட்சி மூலம் விற்பனை செய்வதற்கு உதவுதல்
9. மக்காத குப்பைகளில் மறுசுழற்சி செய்ய இயலாத குப்பைகளை இதற்கென அமைக்கப்பட்ட குழிகளில் பாதுகாப்பாக அப்புறப்படுத்துதலைக் கண்காணித்தல்.
10. உரக்குழிகளில் தயாரிக்கப்படும் மக்கிய உரத்தை கிராம ஊராட்சி விற்பனைசெய்தல் மற்றும் மண்புழு உரம் தயாரித்தலுக்கு அளித்தல்.
11. தூய்மைக் காவலர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள உபகரணங்கள் / மூன்று சக்கர / தள்ளு வண்டிகளை முறையாக பயன்படுத்தலைக் கண்காணித்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை மையத்தை தூய்மையாக பராமரித்தல்.
12. தூய்மைக் காவலர்களுக்கான தினசரி வருகைப்பட்டியலை பதிவு செய்து கையொப்பமிடுதல், பிரதி மாதம் கடைசி வேலை நாட்களில் தினசரி வருகைப்பட்டியலை தொகுத்து, மாதாந்திர ஊதியம் வழங்க வருகை பட்டியலை கிராம ஊராட்சி மூலம் சம்பந்தப்பட்ட கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு பிரதி மாதம் 5ம் தேதிக்குள் அனுப்புதலை கண்காணித்தல்.
13. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் குறித்து கிராம ஊராட்சியால் அவ்வப்போது வழங்கும் பணிகளை முறையாக செயல்படுத்துதல்.

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

Scanned by CamScanner

# இணைப்பு – IV

## கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கடமைகள் மற்றும் பொறுப்புகள்.

1. கிராம ஊராட்சியின் வழிக்காட்டுதலுடன் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் பங்கேற்பு செய்து பணி புரிதல்.
2. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பணிபுரிய வரையறுக்கப்பட்ட தகுதிகளின்படி தூய்மைக் காவலர்களை தேர்வு செய்து கிராம ஊராட்சிக்கு அளித்தல்.
3. தொடர்ந்து வருகை தராத மற்றும் வரையறுக்கப்பட்ட பணி அளவினை தொடர்ந்து செய்யாத தூய்மை காவலர்களுக்கு பதிலாக தகுதியான மாற்று தூய்மை காவலர்களை தேர்வு செய்து அளித்தல்
4. தூய்மை காவலர்களின் தினசரி வருகை பதிவேட்டில் சம்பந்தப்பட்ட பகுதியின் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர் தினசரி குப்பைகள் சேகரம் செய்யப்படுவதை உறுதி செய்து கையொப்பமிடுதல்.
5. பொதுமக்களிடையே இத்திட்டம் குறித்து விழிப்புணாவு ஏற்படுத்தி திட்டத்தில் முழுமையாக பங்கேற்க செய்தல்.
6. இத்திட்டத்தில் ஈடுபடும், தூய்மைக் காவலர்களுக்கு பணி செய்த காலத்திற்கான மாதாந்திர ஊதியம் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதியிலிருந்து தூய்மை காவலர்களின் வங்கிக் கணக்கிற்கு ECS முறையில் அதிகபட்சமாக பிரதி மாதம் 10ம் தேதிக்குள் செலுத்துதல்.
7. தூய்மை காவலர்களுக்கு பிரதி மாதம் 10 ம் தேதிக்குள் ஊதியம் அவர்களது வங்கிக் கணக்கிற்கு செலுத்தப்பட்ட விபர அறிக்கையினை கிராம ஊராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) க்கு அனுப்புதல்.
8. உரக்குழிகளில் தயாரிக்கப்படும் மக்கிய உரத்தை கிராம ஊராட்சி விற்பதற்கு உதவுதல். மேலும் மறு சுழற்சி செய்யப் கூடிய பிளாஸ்டிக் பொருள்களை, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் நடத்தப்படும் Shreddidng Unit க்கு (ஷெரட்டிங் யூனிட்) அனுப்பி விற்பனை செய்ய உதவுதல்.
9. தூய்மை காவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளும் பணிகளை கண்காணித்தல் மற்றும் குறைபாடு இருப்பின் அது குறித்து உடனுக்குடன் ஆய்வு அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லுதல்.
10. மண்புழு உரம் தயாரிப்பதில் ஊராட்சி அளவிளான சுட்டமைப்பு / சுய உதவிக்குழு உறுப்பினர்களை ஊக்கப்படுத்தி அதனை அவர்கள் பொருளாதார நடவடிக்கையாக மேற்கொள்ள உதவுதல்.
11. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் குறித்து மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் வழங்கப்படும் பயிற்சிகளில் பங்கேற்றல் மற்றும் பயிற்சியளித்தல்.
12. திடக்கழிவு மேலாண்மைத் திட்ட செயலாக்கம் குறித்து அவ்வப்போது வழங்கப்படும் பொறுப்புகளை முறையாக செயல்படுத்துதல்.

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

Scanned by CamScanner